# பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்களை

# தடுத்தல், தடை செய்தல் மற்றும் தீர்வு காணுதல், சட்டம் – 2013.


A safe workplace is every woman's right

# "பணியிடங்கள்"

- ஒழுங்கமைக்கப்பட்ட பணியிடம்

துறை, நிறுவனம், உற்பத்தி செய்யும் இடம், அலுவலகம், அரசு சார் நிறுவனம், தனியார் நிறுவனம், கூட்டுறவு சங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனம், விளையாட்டு பயிற்சி கூடம் மற்றும் மற்ற நிறுவனங்கள் 10 நபர்களுக்கு மேல் பணிபுரியும் எந்த பணியிடமாயிருப்பினும்,

- அரசு அங்கீகாரம் பெறாத பணியிடங்கள்

பணியிடம் அல்லது 10 நபர்களுக்கு கீழ் பணிபுரியும் இடம் அல்லது வாழ்விடம் அல்லது வீடு அல்லது பெண்கள் பணியமர்த்தப்பட்டுள்ள எந்த இடத்திலும்,

# பணியிடங்களாவன

- அரசு நிறுவனங்கள்
- தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்
- வீடு
- சிறிய மருத்துவமனைகள்
- தனியார் நிறுவனங்கள்
- நிறுவனங்கள்
- தோட்டங்கள்
- கல்வி நிறுவனங்கள்
- விளையாட்டு பயிற்சி கூடங்கள்
- பெரிய மருத்துவமனைகள்
- சேவை அளிப்பவர்கள்
- கூட்டுறவு சங்கங்கள்

# பாலியல் துன்புறுத்தல்கள்

- தொடுதல், தொட முயற்சித்தல்.
- பாலியல் ரீதியான கோரிக்கைகள்.
- வண்ணங்களின் மூலம் பாலியல் தேடல்களை உணர்த்துதல்.
- ஆபாசப்படங்களை காட்டுதல்/ தொடுதிரையில் காணவைத்தல்.
- தகாத முறையில் தொடுதல், ஆபாசமாக பேசுதல், சமிக்ஜை செய்தல், பாலுணர்வு தூண்டும் வகையில் நடந்து கொள்ளுதல்.



# பாதிக்கப்பட்ட பெண் என்பவள்

- பணியிடம் சார்ந்த இடங்களில் பெண் எந்த வயதினராயிருப்பினும், பணியில் இருப்பவரோ, இல்லாதவரோ, பாலியல் துன்புறுத்தலுக்கு ஆட்பட்டு இருப்பின்,

- வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டு வாழ்விடங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆட்பட்டு இருப்பின்,

# பாதிக்கப்பட்ட பெண்

- வேலையில் இருப்பவர்
- பணியிடத்தில் பார்க்க வந்தவர்கள்
- மாணவிகள்

- வீட்டு வேலை செய்பவர்
- முறைப்பணி/தற்காலிக பணி/தினக்கூலி/அழைப்பின் பேரில் பணி
- சம்பளத்திற்கு வேலை செய்ய/ தாமாக வேலை செய்ய வந்தவர்/ஏதாவது வகையில்
- நேரடியாக பணி செய்பவர் அல்லது நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டவர்
- ஒப்பந்த பணியாளர்/ தற்காலிக பணியாளர்/ பயிற்சி பெறுபவர்/படிக்கும் போதே பயிற்சியில் உள்வர்கள்.

# பணியமர்த்துபவர்

- அரசு அலுவலகம், உள்ளாட்சி நிர்வாக பணியிடங்கள்
  - தலைமை அலுவலர் குறிப்பிட்ட நபர்
- தனியார் பணியிடங்கள்
  - நிர்வாகப் பொறுப்பாளர் / கண்காணிப்பாளர்/ பாதுகாப்பவர்
- பணிநிமித்தமாக தங்கியிருக்கும் வீடுகள்
  - பணியிடங்களில் பணிபுரிபவர் மூலம் பயனடைவோர்

# பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலை தடுத்தல்

- பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுக்க உள்ளக புகார் குழு மற்றும் உள்ளூர் புகார் குழுக்கள் அமைத்தல் அவசியம்.
- ஒவ்வொரு பணியிடத்திலும் நான்கு நபர்களைக் கொண்ட உள்ளக புகார் குழு அமைக்கப்பட வேண்டும்.
- இவ்வாறான குழுக்களில் உள்ளவர்கள் மூன்று வருடங்களுக்கு மிகாமல் அவர்கள் பணியாற்ற வேண்டும்.
- உள்ளூர் புகார் குழுக்கள் மாவட்ட ஆட்சியரின் நேரடி கண்காணிப்பில் இயங்க வேண்டும்.
- மாவட்ட சமூகநல அலுவலர்கள் இச்சட்டத்தை செயல்படுத்துவதில் உறுதுணையாக இருப்பார்கள்.

# உள்ளக புகார் குழு

| வ.எண். | உறுப்பினர் | தகுதிகள் |
| --- | --- | --- |
| 1. | தலைவர் | பணியிடத்தில் பணிபுரியும் மூத்த பெண் அதிகாரி தலைவராக இருப்பார். அவ்வாறான நபர் இல்லையெனில் அதே அலுவலகத்தில் அல்லது துறையில் அல்லது சார்ந்த அலுவலகங்களில் உள்ள ஒரு மூத்த பெண் அதிகாரி நியமிக்கப்படுவார். |
| 2. | குறைந்தது 2 உறுப்பினர்கள் | சட்ட அறிவு/ சமூகப்பணி அனுபவம் மிக்க பணியாளர்களுள் பெண்களுக்கான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அக்கறை கொண்ட இருவர் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர். |
| 3. | உறுப்பினர் | பெண்கள் சார்ந்த பிரச்சினைகளுக்கும் பாலியல் துன்புறுத்தலை தடுத்தல் குறித்த பணிகளில் அக்கறையுடன் செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவனத்திலிருந்து ஓர் உறுப்பினர் நியமிக்கப்படுவார். |

- உள்ளக புகார் குழுவில் ஐம்பது சதவிகிதம் பெண்கள் இருக்க வேண்டும்.
- உள்ளக புகார் குழுவின் செயல்பாடுகளில் கலந்து கொள்ளும் தன்னார்வ தொண்டு நிறுவன உறுப்பினர்களுக்கு போக்குவரத்து செலவினம் அல்லது அமர்வு நிதியை பணியமர்த்தும் நிறுவனர் அளிக்க வேண்டும்.

# புகார் மனுவின் மீதான விசாரணை

- பணியிடம் சார்ந்த புகார் இருப்பின் நிறுவனத்தின் பணிவிதிகள் அல்லது ஒழுங்கு நடவடிக்கை விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- புகாரளிப்பவர் வீட்டு வேலை செய்பவராக இருப்பின் உள்ளூர் புகார் குழுவிற்கு தக்க நடவடிக்கைக்காக புகார் மனு அனுப்பப்படும்.
- உள்ளூர் புகார் குழு ஏழு தினங்களுக்குள் புகாரை பதிவு செய்ய காவல் நிலையத்திற்கு அனுப்பும். IPC - 509 ன் படி புகார் காவல் நிலையத்தில் தக்க நடவடிக்கைக்காக பதிவு செய்யப்படும்.
- உள்ளக புகார் குழு மற்றும் உள்ளூர் புகார் குழு விசாரணையின் முடிவுகளை, பதிவுகளை பாதிக்கப்பட்ட பெண் மற்றும் எதிர்மனுதாரருக்கு வழங்க வேண்டும்.

# புகார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கால அட்டவணை

| தீர்வு காணுதல் | கால அட்டவணை |
|---|---|
| புகார் அளிக்க வேண்டிய காலம் | கடைசி நிகழ்வு ஏற்பட்ட 3 மாதத்திற்குள். |
| எதிர்மனுதாரருக்கு தகவல் அனுப்புதல் | புகார் மனு பெறப்பட்ட 7 தினங்களுக்குள் |
| விசாரணை முடிக்க வேண்டிய கால அளவு | 90 நாட்களுக்குள். |
| புகார் மீதான விசாரணை அறிக்கை மேலதிகாரிக்கு அனுப்ப வேண்டிய காலவரையறை | விசாரணை முடிவுற்ற 10 தினங்களுக்குள் |
| விசாரணை அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கால வரையறை | 60 தினங்களுக்குள் |
| மேல்முறையீடு | பரிந்துரைகள் பெறப்பட்ட 90 தினங்களுக்குள் |

# விசாரணை நிலுவையில் உள்ள போது எடுக்க வேண்டிய நடவடிக்கை

- உள்ளக புகார் குழு மற்றும் உள்ளூர் புகார் குழு விசாரணை நடைபெற்று வரும் நிலையில் பாதிக்கப்பட்ட பெண் கோரிக்கையின் அடிப்படையில் நிறுவனருக்கோ அல்லது மேலதிகாரிக்கோ, சம்பந்தப்பட்ட நபர்களை பணியிடமாற்றம் செய்ய பரிந்துரைக்கலாம் (பாதிக்கப்பட்டவர் அல்லது எதிர்மனுதாரர்)
- பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு 3 மாதம் வரை விடுப்பு வழங்கலாம்.

# நிறுவனங்களின் கடமைகள்

- பணியிடங்களில் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். பணியிடங்களுக்கு வருபவர், பணியாற்றுபவர், பணியிடம் தொடர்பாக உள்ள அனைவருடைய பாதுகாப்பும் அவசியமாகும்.
- உள்ளக புகார் குழுவின் துணைவிதி 4 பிரிவு (1) ன் படி பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் செய்வோருக்கான தண்டனைகள் குறித்து அனைவரும் பார்த்து தெரிந்து கொள்ளக்கூடியபடி விளம்பரம் செய்திருத்தல் வேண்டும்.
- பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் தடைசட்டம் குறித்து கருத்தரங்குகள், விழிப்புணர்வு நிகழ்வுகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்த வேண்டும்.
- பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் குறித்து முறை சார்ந்து அல்லது முறை சாரா வகையில் யாரிடம் எங்கு புகார் அளிக்க வேண்டும் என்ற விவரத்தை அனைத்து பணியாளர்களுக்கும் அறியச் செய்ய வேண்டும்.

# தண்டனைகள்

- நிறுவனங்களில் உள்ளக புகார் குழு அமைக்காத பட்சத்தில் ரூ. 50,000 வரை அபராதத் தொகை விதிக்கப்படும். மேலும் புகாரின் அடிப்படையில் வழங்கப்படும் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தாலும், மாவட்ட அதிகாரிக்கு ஆண்டறிக்கை சமர்பிக்காமல் இருந்தாலும் அபராதம் விதிக்கப்படும்.

- முதலாளி சட்டத்திற்கு உட்படாது மீண்டும் மீண்டும் தவறிழைப்பின் அல்லது உத்தரவுகளை ஏற்காதிருப்பின் அபராதத் தொகை இரட்டிப்பாக்கப்படும். மேலும் அதிகப்படியான தண்டனைக்கும் உட்படுத்தப்படுவார்.

- விற்பனைக்கூடம் அல்லது பணியிட பதிவு/ அனுமதி இரத்து செய்யப்படும்/ மீளபெறுதல்/ புதுப்பிக்கப்பட மாட்டாது.

# நன்றி

